**தலைப்பு 115 - வலுசக்தி அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வலுசக்தி அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் வலுசக்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூலை 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் வலுசக்தி அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 நவம்பர் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலுசக்தி அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் வலுசக்தி அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம்முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை

தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

**……………………………………………………………..……**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்த அறிக்கையின் 1.6.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

**.......................................................................**

### 1.6.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

**........................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ..................................................... | ................................. | .............................. |
| ஆண்டின் இறுதியில் காசோலைகள் எழுதப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி (2022 யூன் 07) வரை அமைச்சிற்கு முறைப்படியாக கிடைத்திருக்காத ரூபா 445,000 தொகையான ஒரு Desktop CPU கணனி நடைமுறை ஆண்டின் போது கொள்வனவாக கருதி சொத்துக்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இக்கணனி 2021-12-31 ஆந் திகதி வரை ஒரு சொத்தாக சிகாஸ் மென்பொருளுக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. பின்னர் மாதிரி பொருள் விபரத்திற்கு இணங்கியிருக்காததனால் அந்த நிறுவனத்திற்கு மீள | சொத்துக்களை கொள்வனவு செய்யும் நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். காசோலையை எழுதி வைத்துக்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

வழங்கப்பட்டிருந்தது. பின்னர் விற்பனை செய்த நிறுவனம் வேண்டிக்கொண்ட வகையான கணனியை வழங்குவதற்கு முடியாது எனத் தெரிவித்திருந்ததுடன் அதற்கிணங்க 2022 மே மாதத்தின் போது 380787 ஆம் இலக்க காசோலை மற்றும் ரூபா 445,000 தொகை அரசாங்க வருமானத்திற்குச் செலவுவைக்கப்பட்டதுடன் 2022 யூன் மாதம் இந்த டெக்ஸ் டொப் வகையான கணனி சிகாஸ் மென்பொருளிலிருந்து நீக்கப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சரிசெய்யப்பட்டது.

**1.6.2 செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்**

**........................................................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ...................................... | ........................................... | ............................. |
| மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் முற்பணக் கொடுப்பனவு ரூபா 2,022,233 ஆகக் காட்டப்பட்டிருந்தும் முற்பணங்கள் கணக்கிற்கு இணங்க அப்பணத்திலிருந்து கொடுப்பனவு ரூபா 2,021,516 ஆக இருந்தது. | இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட கடன் தவணைப் பணமும் வட்டியும் தவறுதலாக பிழையாக பதியப்பட்டிருந்ததுடன் அப்பிழை வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் சரியாக பதியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இது முற்பணம் பீ கணக்கின் மீதிக்கு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கவில்லை. | முற்பணக் கணக்கின் வரவு மற்றும் செலவுப் பதிவுகள் நிர்ணயிக்கபர்பட்ட விடய இலக்கத்தின் கீழ் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.6.3 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதிலுள்ள குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அனைத்து நேரொத்த பெறுமதிகளையும் வெளிப்படுத்தும் வகையில் தொடர்புபட்ட விபரமான குறிப்பு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலானது அரசாங்க கணக்கு வழிகாட்டிக் கோவை இலக்கம் 2021/03 இற்கு இணங்க இடம்பெற்றது. 2021 நிதிக்கூற்று படிவமானது 2020 ஆம் ஆண்டினை விட வேறுபட்டுள்ளதனால் 2020 ஆம் ஆண்டிற்கான தரவுகளுடன் ஒப்பீடு செய்வதனை வசதியளிக்கும் வகையில் 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தயாரிப்பதற்கு நிதி அமைச்சினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கையில் 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் தரவுகள் நேரொத்த வகைகயில் செம்மையாக்கப்பட்டது. | விபரமான குறிப்புக்களை நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 கணக்காய்வு செய்த நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் ஏனைய பெறுவனவுகளாகக் | 2020 ஆம் ஆண்டின் போது ஏனைய வருமானத் தலைப்பிற்காக | கடந்த காலப்பகுதிக்கான நேரொத்த தரவுகளாக அல்லது மீண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்த ரூபா 976,406 மீதி நடைமுறையாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் தொடர்புபட்ட தரவுகளாக அல்லது மீண்டும் செம்மையாக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான தரவுகள் உரிய தரவுகளாக ஏனைய முறைப்படியான வெளிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சேகரிக்கப்பட்ட வருமானமான ரூபா 979,406 பணம் 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது ஏனைய வருமானத் தலைப்புக்களின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானத்தை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது 2021-12-31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி செயலாற்றல் கூற்றானது 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க தயாரிக்கப்பட்டது. | செம்மையாக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான தரவுகளுக்குரிய தரவுகளாக ஏனைய முறைப்படியான வெளிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2020 கணக்காய்வு செய்த நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி சொத்துக்களின் கீழ் காசு அல்லது காசுக்குச் சமனானவைகளாக காட்டப்பட்டிருந்த ரூபா 4,430,717 தொகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கட்டுநிதி மீதியாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 4,430,717 மீதியானது நடைமுறை ஆண்டின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் தொடர்புபட்ட தரவுகளாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020-12-31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்த்துவைக்கப்பட்ட ரூபா 4,430,717 பணம் 2020-12-31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி சொத்துக்களின் கீழ் காசும் காசுக்குச் சமனானவைகளும் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கட்டுநிதி மீதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இப்பணம் 2020-12-31 இல் உள்ளவாறு | கடந்த காலப்பகுதிக்கான நேரொத்த தரவுகளாக அல்லது மீண்டும் செம்மையாக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான தரவுகளுக்குரிய தரவுகளாக ஏனைய முறையான வெளிப்படுத்தல் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திறைசேரிக்கு தீர்த்துவைக்கப்பட்டிருந்ததனால் அம்மீதியினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது மீண்டும் செம்மையாக்கப்பட்ட கணக்கு தயாரிக்கப்பட்டது. | |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்த காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 38,000,000 ஆக இருந்ததுடன் நடைமுறை ஆண்டிற்கான தொடர்புபட்ட கட்டுநிதி பெறுவனவு ரூபா 38,297,067 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த வித்தியாசத்திற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் அமைச்சு மின்சக்தி அமைச்சுடன் இணைந்து ஒரு அமைச்சரவை அமைச்சாக 2020.08.31 ஆந் திகதி வரை செயற்பட்டதுடன் 2020-09-01 ஆந் திகதியிலிருந்து தனியாக ஒரு செலவு விடயத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவானது தேர்தல் கடமைகளுக்காக ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ஆண்டின் ஆரம்பத்தில் வழங்கியிருந்த ரூபா 297,067 பணம் 119 ஆம் இலக்க செலவுத் தலைப்பானது மின்சகத்தி அமைச்சின் மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட 115 ஆம் இலக்க செலவுத் தலைப்பிற்கு மாற்றப்படாது அதன் அடிப்படையில் இந்த வித்தியாசம் ஏற்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

#### 2.1.1 வருமான மதிப்பீட்டினைத் தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் ரூபா 130 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட தொடக்க வருமானம் மீண்டும் ரூபா 162 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உள்ளபடியான வருமானம் ரூபா 225 மில்லியன் வரை அதாவது திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினைப் போல 39 சதவீத தொகையினால் அதிகரித்திருந்தது. அதற்கிணங்க மதிப்பீட்டினைத் தயாரித்தல் நடைமுறைச்சாத்திய மட்டத்தில் காணப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான தொடக்க வருமான மதிப்பீடானது ரூபா 130 மில்லியனாக இருந்ததுடன் அது ரூபா 162 மில்லியன் வரை ஆண்டின் போது திருத்தப்பட்டது. அப்போது நாட்டில் காணப்பட்ட கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் வருமானக் குறைவு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 225 மில்லியன் வரை வருமானத்தை அதிகரிக்க முடியுமாக இருந்தது. இதற்கு காரணமாக உராய்வு நீக்கி எண்ணை மற்றும் தார் இறக்குமதிக்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்களின் அளவு அதிகரித்ததன் காரணமாக அறவிடப்பட்ட பதிவுசெய்தல் கட்டணத்தின் மூலம் உருவாகிய வருமானம் அதிகரித்தமை மற்றும் தார் இறக்குமதியின் அடிப்படையில் அறவிடப்பட்ட மாற்றல் வருமானம் அதிகரித்தலினை சுட்டிக்காட்டலாம். | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை முடியுமான அளவில் சரியாகத் தயாரிப்பதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 15 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 12 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அமைச்சரை சந்திப்பதற்கு வருகை தருகின்ற விசேட அழைப்பாளர்களை மட்டுப்படுத்துதல், சுகாதார பாதுகாப்பு வழிகாட்டிகளின் அடிப்படையில் உபசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை, வாகனங்கள், உபகரணங்கள் மற்றம் இயந்திரங்களின் பயன்பாட்டினைக் குறைத்தல் என்பவற்றினால் பழுதுபார்த்தல் செலவு குறைவடைந்தமை, மின்சாரம் மற்றும் நீரின் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, நிறுவனம் மூடப்பட்டதன் காரணமாக சுத்திகரிப்பு செலவுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, அமைச்சினை ஏனைய கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை, இயந்திரங்களைள கொள்வனவு செய்வதற்கு முடியாமை, முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் திறைசேரிக்கு குறைந்த செலவுச் சுமையினை ஏற்படுத்தும் வகையில் செலவுகளை முகாமைத்துவம் செய்ததன் அடிப்படையில் செலவுகளை மட்டுப்படுத்தியதன் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அமைச்சில் காணப்பட்ட வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வாகனங்களாக | நி.பி 30 (ii) இன் பிரகாரம் மதிப்பீட்டினை முடியுமான அளவில் சரியாகத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இருந்ததன் காரணமாக காப்புறுதிச் செலவு குறைவடைந்தமை, குத்தகை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்காக ஒரு ஆண்டு காலம் கடந்ததன் பின்னர் மீண்டும் அக்காலத்தை நீடிப்பதாகக் கூறியிருந்தும் அது இடம்பெறாமையின் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 07 செலவு விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 15 சதவீதத்திலிருந்து 79 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது. மேலும் காலப்பகுதியின் போது 06 செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டினை மூலம் மற்றும் நிதிப்பிமாணம் 66 மாற்றல்களின் கீழ் தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 40 சதவீதத்திலிருந்து 12,984 சதவீதம் வரையான அளவில் நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | புதிய உத்தியோகத்தர்களின் வருகையின் காரணமாக வழங்கிய நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததன் அடிப்படையில் மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குவதில்லை எனக் கூறி குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்குப் பதிலாக மிகுதி செலவு விடயங்களிலிருந்து நிதி ஏற்பாட்டினை மாற்றுதல், வேண்டிக் கொண்ட நிதி ஏற்பாட்டினை வழங்காததன் காரணமாக மேலதிக நேர வேலைக்காக செலவு செய்ய வேண்டியிருந்த செலவுகளை மேற்கொள்ளல் பெற்றோலியத்தை அகழ்ந்தெடுத்தல் சம்பந்தமாக ஏனைய நாடுகளின் முதலீட்டாளர்களை நாட்டிற்கு வரவழைப்பதற்காக பங்குபற்றுதல் அத்தியவசியமானது என்பதனால் நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமை மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வாகனங்களின் பராமரிப்புச் செலவு அதிகரித்தல், அமைச்சின் உதத்தியோகபூர்வ இல்லத்தினை முழுமையாக திருத்தம் செய்தல், வெளிநாட்டு மாநாடுகள் மற்றும் கருத்தரங்களுக்காக | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சு உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவதற்கு போதியளவு நிதி ஏற்பாடு இல்லாமை, போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிக்கு தகைமையுள்ள உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வாகனங்களின் மூலம் போக்குவரத்து செலவுகள் அதிகரித்தல், வாகனங்களை திருத்தம் செய்வதற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள பணம் போதியதாக இல்லாமை, புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்ய முடியாமையின் காரணமாக காணப்பட்ட பழைய இயந்திரங்களை திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதன் காரணமாக நி.பி 66 இன் மூலம் நிதி ஏற்பாட்டினை மாற்றல் செய்ய வேண்டி ஏற்பட்டது. | |
| (இ) | நடைமுறை ஆண்டின் போது 02 செலவு விடயங்கள் தொடர்பான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் (நூறு வீதம்) மற்றும் இன்னும் 4 செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டில் 21 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் வரையான அளவு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு கருத்தரங்குகள் சம்பந்தமாக பங்குபற்றுதல் அத்தியவசியமானது என்பதனால் நிதி ஏற்பாடு போதாமைக்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அதற்காக பங்குபற்றுவதற்கு கௌரவ அமைச்சர் அவர்களுக்கு முடியாமை, கௌரவ அமைச்சரின் பதவியினர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனத்திற்காக முழுமையான திருத்தச் செலவுகள் ஏற்படாமை, காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பொருட்கள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டமை, டொலரின் பெறுமதி ரூபாவிற்கு ஒப்பீடாக அதிக பெறுமதியில் காணப்பட்டமையின் காரணமாக பொருட்களின் விலை உயர்வாகக் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்பட்டமை, அலுவலகங்கள் மூடப்பட்டதனால் பராமரிப்புச் செலவுகள் குறைவடைந்தமை, நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் அலுவலகங்கள் மூடப்பட்டதன் காரணமாக மூலதனச் செலவுகள் ஆண்டின் தொடக்க காலாண்டு பகுதியில் இடம்பெற்றிருக்காமை, 2021-08-28 ஆந் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் புதிய மூலதனச் செயயற்திட்டங்களை கைவிடுதல், இயற்கை வாயு கொள்கைக்குரிய நடவடிக்கைகள் ஆண்டின் போது இடம் பெற்றிருக்காமை முதலிய காரணங்களால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | இரண்டு செலவு விடயங்கள் தொடர்பான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்ததற்கான காரணமாக "2021 ஆகஸ்ட் 21 ஆந் ஆந் திகதி நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் புதிய மூலதனச் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டதனால் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படவில்லை" என்பதாகக் காட்டப்பட்டிருந்தும் அத்திருத்தம் இடம்பெற்ற சந்தர்ப்பம் வரையான 08 மாதங்களின் போது எந்த செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | -மேற்படி- |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டிற்கான கொடுப்பனவுகள் அந்த நிதி ஆண்டின் போதே விடுவிக்கப்பட வேண்டியதுடன் எந்த பொறுப்பினையும் அடுத்துவரும் ஆண்டில் தீர்த்துவைக்கும் குறிக்கோளில் முன்கொண்டு செல்லாதிருக்க வேண்டும் எனவும் அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பொறுப்புக்களைத் தீர்த்துவைப்பதற்காக திறைசேரி மேலும் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாது மீளாய்வாண்டின் இறுதியில் மிகையாகவுள்ள காசு மீதியினை மிகைத்து ரூபா 3,146,930 வரை பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது வேண்டிக் கொண்ட நிதி ஏற்பாடு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வழங்கப்படாமையும் மேலதிக நிதி ஏற்பாடு 2021 ஆம் ஆண்டின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையும் காரணமாக கண்டிப்பாக செலவுகளை தாமதிக்கக்கூடிய செலவுகளிலிருந்து நி.பி 66 இன் கீழ் மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமையின் அடிப்படையில் இந்நிலைமை உருவாகியுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமைக்கு நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | 2019 திசெம்பர் 03 ஆந் தமிகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டிற்கான கொடுப்பனவுகள் அந்த ஆண்டின் போதே விடுவிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு (iii) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் அளவு ரூபா 3,248,403.97 ஆகக் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சரியான மீதிகளை கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு அல்லது பொருத்தமான வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தும் அத்திகதியில் ரூபா 3,458,084 வரையான பொறுப்புக்களும் கடப்பாடுகளும் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது. | | அவற்றினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நடைமுறை ஆண்டிற்கான முற்பணக்கணக்கின் உச்ச அளவு செலவு எல்லை ரூபா 2 மில்லியனிலிருந்து ரூபா 3 மில்லியன் வரை மற்றும் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 500,000 இலிருந்து ரூபா 2.4 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் செலவுகளின் உச்ச எல்லை ரூபா 2 மில்லியன் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 500,000 ஆகக் காணப்பட்டது. அதற்கிணங்க திறைசேரி ஏடுகளில் அந்த எல்லைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | அமைச்சின் ஏடுகளின் மீதிகளுடன் திறைசேரி மீதிகளை செம்மையாக்குதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கொடுப்பனவு தொடர்பான எல்லை திருத்தம் செய்யப்பட்டிருந்தும் நிதிப்பிரமாணம் 506 (D) இன் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற அரசாங்க | 2021-10-26 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் முற்பணங்கள் பீ கணக்கின் எல்லைகள் திருத்தப்பட்டன. அந்த எல்லைகள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு கணக்கு பொழிப்புக்களின் மூலம் திறைசேரிக்கு | முற்பணங்கள் பீ கணக்கின் எல்லைகளைத் திருத்தி கணக்குகளில் சரியாகக் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் B கணக்கின் அங்கீகரித்த திருத்திய எல்லைகள் காட்டப்படாதிருந்ததுடன் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்படுகின்ற எல்லையாக திருத்திய எல்லைகள் காட்டப்பட்டிருந்தன. | அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நிதிப்பிரமாணம் 502 (ஆ) இன் பிரிவு 1 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் முற்பணக் கணக்கு சம்பந்தமாக கிடைக்க வேண்டிய பணம் தாமமின்றி சேகரிக்கப்படுகின்றது என்பதனை கவனித்துக்கொள்ள வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து சேவையை கைவிட்டுச் சென்றுள்ள சாரதியின் ரூபா 67,884 இடர் கடன் மீதி 09 ஆண்டுகளைக் கடந்திருந்தும் இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் பணத்தை அறவீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள DMR/5184/2018 ஆம் இலக்க வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என சட்டமா அதிபதி திணைக்களத்தின் PRD/1/3/2/49 ஆம் இலக்க 2022-05-09 ஆந் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு-06) அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆண்டின் இறுதியில் காசேலைகள் எழுதப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி (2021 யூன் 07) வரை அமைச்சிற்கு கிடைத்திருக்காத ரூபா 79,056 மொத்தமான Toshiba வகையான 02 Toner களுக்காக வழங்கப்பட்ட காசேலைகள் கணக்காய்வுத் திகதி வரையும் வழங்கப்பட்டு எனினும் சமர்ப்பிக்கப்படாத காசோலையாகக் காட்டப்பட்டிருந்தது. | 03 டோனர்களைக் கொள்வனவு செய்வதற்காக 2021-12-13 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்தும் 2021-12-30 வரை கிடைத்திருக்கவில்லை. அதற்கிணங்க அவசர தேவைப்பாட்டின் அடிப்படையில் அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திடமிருந்து 2021-12-30 ஆந் திகதி 02 டோனர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு | காசோலை எழுதப்பட்டு வைத்துக்கொண்டு இருக்காதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ள டோனர்கள் நேரடியாக உரிய நிருவாகப் பிரிவிற்கு அறிவிக்கப்படாமையின் காரணமாக 2021-12-31 ஆந் திகதி இருப்பேடுகளுக்கு உள்ளடக்கப்படாமையால் உரிய காசேலைகள் வழங்கப்படாது வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் 2022-06-24 ஆந் திகதி அக்கொடுப்பனவிற்குரிய காசோலை திகதி நீடிக்கப்பட்டு வழங்கப்பட்டது. | |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) எரிபொருள் வழங்கும் சிறந்த தரத்தினை பாதுகாப்பதற்கும் நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் முடியுமான வகையில் கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல் பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும் மதிப்பீடு செய்தலும் அமைச்சின் செயற்பாடாக இருந்த போதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் இலங்கை இந்திய பெற்றோலியக் கம்பனி (LIOC) ஆகிய இரண்டு நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் முறையான நிகழ்ச்சித்திட்டம் | அமைச்சு மட்டத்தில் நடாத்தப்படுகின்ற மாதாந்த முகாமைத்துவ கூட்டங்களின் போது தேவையான விடயங்கள் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இதன் போது நிறுவனத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயல் முன்னேற்ற மீளாய்வு, கணக்காய்வு குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கலந்துரையாடல் மீளாய்வு செய்தல், நிறுவன நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல் ஒவ்வொரு நிறுவனங்களின் நிதிசார் இலாபத்தன்மை, வாடிக்கையாளர்களின் திருப்தியை உருவாக்கும் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் இலங்கை இந்திய எண்ணை கம்பனி (LIOC) ஆகிய இரண்டு நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் முறையான ஒரு வேலைத் திட்டம் அமைச்சின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| அமைச்சின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு போதியளவு சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வகையில் செயற்படுத்துவது தொடர்பாக தீர்மானம் எடுத்தலும் வழிகாட்டுதலும் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>• மேலும் நிறுவக ரீதியான நடவடிக்கைகள் அதனை தோற்றுவிப்பதற்கான அதிகாரச் சட்டங்கள்/ அமைப்பு அகவிதி மற்றும் உரிய உடன்படிக்கைகளைப் பின்பற்றுதல் தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்தி காலத்திற்கு பொருத்தமாக அவற்றில் தேவையான திருத்தங்களை செய்தலும் இடம் பெறுகின்றது.<br><br>• அதற்குப் புறம்பாக பெறுகை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும், நிறுவக, செயற்பாட்டு ரீதியான மற்றும் நிதி ரீதியான முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது ஒரு குழுவினூடாக அத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமாகவிருந்தால் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அமைச்சின் உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்தலும் இடம் பெறுகின்றது.<br><br>• இலங்கை இந்திய பெற்றோலியக் கம்பனியை (LIOC) நேரடியாக மேற்பார்வை செய்வதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்த போதிலும் ஒழுங்குபடுத்துதல் செயற்பாடு மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | | • கப்பல் எண்ணையை களஞ்சியப்படுத்தும் வியாபாரத்திற்காக (பங்கரிங்) அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன் அதனுடன் இணைந்து கப்பல் எண்ணையை களஞ்சியப்படுத்தும் வியாபாரத்தின் மூலம் வியாபாரத்திற்குரிய நிபந்தனைகளை விதிப்பதுடன் அந்த நிபந்தனைகளை அமுல்ப்படுத்துவதனை மேற்பார்வை செய்தல்.<br><br>• எரிபொருள் நிரப்பு நிலையங்களை செயற்படுத்துவது தொடர்பான நிபந்தனைகள் CPC நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் எழுமாந்தமாக தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை பரீட்சிக்கும் நடவடிக்கைகளின் போது LIOC நிரப்பு நிலையங்களும் பரீட்சிக்கப்படுகின்றன. | |
| (ஆ) | உலகளாவிய அமைவிடத்திற்கு இணங்க முழு உலகமும் கவனம் செலுத்தியுள்ள உலகத்தின் இரண்டாவது ஆழமான துறைமுகமாகிய திருகோணமலை துறைமுகத்தில் 1930 ஆம் ஆண்டிலிருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள எண்ணைத் தாங்கி முறைமையானது 12,500 மீட்டர் கொள்ளளவினைக் கொண்ட 102 தாங்கிகளும் ஏனைய அவை சார்ந்த வசதிகளையும் உள்ளடக்கியுள்ளன. தற்பொழுது காணப்படுகின்ற | திருகோணமலை எண்ணை தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்வதற்காக இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் காரணமாக அத்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் பின்னர் இந்த தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் நடைபெற்ற இராஜதந்திர கலந்துரையாடலானது 2021 | திருகோணமலை எண்ணை தாங்கி தொகுதியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பினை மேற்கொண்டு பாவனைக்கு எடுத்துக்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 99 முழுத் தாங்கிகளில் கீழ்ப் பகுதியிலுள்ள 14 தாங்கிகளை இலங்கை இந்திய எண்ணைக் கம்பனி பயன்படுத்தி வருகின்றது. கைவிடப்பட்டுள்ள மேல் பகுதியிலுள்ள 84 தாங்கிகளை திருத்தம் செய்வதற்கான தொடக்க தீர்மானம் எடுக்கும் நடவடிக்கையானது 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் தாங்கி தொகுதியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பிற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் எண்ணை தாங்கி தொகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் (CPC) மற்றும் இலங்கை இந்திய எண்ணை கம்பனி (LIOC) யும் இணைந்து Trinco Petroleum Terminal (Pvt) Ltd என்ற பெயரில் ஒரு ஒருங்கிணைந்த கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பான அபிவிருத்தி திட்டமேனும் இன்றுவரை தயாரிக்கப்படவில்லை. | ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் முடிவுறுத்தப்பட்டது. அதன் பெறுபேறாக இந்த எண்ணை தாங்கி தொகுதியில் 14 எண்ணைத் தாங்கிகள் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனிக்கும் 24 எண்ணைத் தாங்ககிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் 61 எண்ணைத் தாங்கிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனியும் ஒருங்கிணைந்து தோற்றுவித்த Trinco Petroleum Terminal (Pvt) Ltd நிறுவனத்திற்கும் அபிவிருத்தி செய்வதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டன. Trinco Petroleum Terminal (Pvt) Ltd நிறுவனம் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்த குறுகிய காலத்தில் நிறுவனத்திற்கு தேவையான நிருவாக சபையையும் பதவியணியினரையும் சேர்த்துக்கொண்டு அந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 61 எண்ணைத் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தொடக்க நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருவதுடன் சிறப்பாக ஆய்வு செய்ததன் பின்னர் மிகுதிக் காலத்தில் விபரமான அபிவிருத்தி திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை திருத்தம் செய்து விரிவுபடுத்துவதற்கு அதேபோல உள்நாட்டு | சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை திருத்தம் செய்து விரிவுபடுத்துவது மற்றும் ஒரு புதிய சுத்திகரிப்பு | சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தினை திருத்தம் செய்து விரிவுபடுத்துவதனைப் |

| | | | |
|---|---|---|---|
| | தேவைப்பாட்டினைக் கருத்தில் கொண்டு புதிய சுத்திகரிப்பு நிலையத்தை ஸ்தாபிப்பது சம்பந்தமாக 2011 ஆம் ஆண்டின் போது அறிஞர்கள் குழுவினால் சாத்தியவள ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டிருந்தும் எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை திருத்தம் செய்து விரிவுபடுத்துவதற்கு அல்லது ஒரு புதிய சுத்திகரிப்பு நிலையத்தினை ஸ்தாபிப்பதற்கு இன்றுவரை முடியாதிருந்தது. | நிலையத்தை ஸ்தாபிப்பது சம்பந்தமாக 2011 ஆம் ஆண்டின் போது சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தற்பொழுது தொழில்நுட்ப மற்றும் பொருளாதார விடயங்களின் காலரீதியான மாற்றங்களின் காரணமாக அதனை அடிப்படையாகக் கொண்டு புதிய சாத்தியவள ஆய்வினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு பின்வரும் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.<br>(i) சாத்தியவள ஆய்வு அறிக்கை (Feasibility Report) பிரேரணைகளைக் கோரும் வரைபு (Draft RFP Report)<br>(ii) Configuration report<br>(iii) சந்தை ஆய்வு அறிக்கை (Market Survey report)<br>அதற்கிணங்க இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக பொருத்தமான ஒரு முதலீட்டாளரினை கண்டுபிடிப்பதற்கு பிரேரணைகளை கோரும் சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | போல உள்நாட்டு தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு புதிய சுத்திகரிப்பு நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான பிரேரணைகளை நடைமுறைச் சாத்தியமாக நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஈ) | காங்கேசன்துறையில் அமைந்துள்ள எரிபொருள் களஞ்சியத்தை அந்த இடத்திலிருந்து அகற்றுமாறு 2011 ஆம் ஆண்டின் போது சீமெந்து கூட்டுத்தாபனத்தினால் இலங்கை பெற்றோலிய | காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சிய தொகுதியினை தோற்றுவிப்பதற்காக தேவையான காணியை பொறுப்பேற்பது சம்பந்தமாக உருவாகியுள்ள சிக்கலான நிலைமையினை தீர்த்துவைத்து அக்காணியை | வடமாகாணத்திற்கான களஞ்சியத்தை ஸ்தாபிப்பதற்கு அல்லது காணப்படுகின்ற களஞ்சியத்தினை திருத்தம் செய்து விரிவுபடுத்தலினை |

| | | | |
|---|---|---|---|
| | முனைய கம்பனிக்கு (CPSTL) தெரியப்படுத்திய திகதியிலிருந்து இன்றுவரை வடமாகாணத்திற்காக ஒரு களஞ்சியத்தினை ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. மேலும் 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொருத்தமான ஒரு காணியை தேடிக் கண்டுபிடிக்கும் வரை காணப்படுகின்ற களஞ்சியத்தை திருத்தம் செய்து விரிவுபடுத்தலினை மேற்கொண்டு பேணுவதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தும் இன்றுவரை அச்செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கும் முடியாதிருந்தது. | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்றதன் பின்னர் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. களஞ்சிய தொகுதியினை தோற்றுவிப்பதற்குத் தேவையான தொடக்க திட்டம் (Drawings) இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனைய கம்பனியால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை புகையிரத திணைக்களத்துடன் உரிய காணிக்கான நுழைவினை சான்றுபடுத்தும் வகையில் புகையிரத வீதியை நீடித்தல் கலந்துரையாடப்பட்டது. | மேற்கொண்டு பேணுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2008 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பொலிப்டோ இலங்கை கம்பனியானது பெற்றோலிய அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்பட்டது. இதன் தொழிற்சாலை ஹொரணை பிரதேசத்தில் அமைந்துள்ளதுடன் பிளாஸ்டிக் பொலித்தீன் திணம கழிவுகளை பயன்படுத்தி எரிபொருளை தயாரித்தல் இதன் பிரதான செயற்பாடாகும். அமைச்சிற்கு 60 சதவீதம் தயாரிப்பாளருக்கு 30 சதவீதம் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பெற்றோலியக் ஆராய்ச்சி பீடத்திற்கு 10 சதவீதம் என்பனவாக இக்கம்பனியின் உரிமையாண்மை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இக்கம்பனி தற்பொழுது செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதுடன் | 2009 பெப்ரவரி 19 ஆந் திகதிய மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆனந்த விதானகே அவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒன்றித்த உடன்படிக்கை மற்றும் அதன் 12.3 ஆம் பிரிவின் பிரகாரம் திருத்தங்களை உள்ளடக்கி 2009-12-08 ஆந் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆனந்த விதானகே மற்றும் பொலிப்டோ இலங்கை தனியார் கம்பனியுடன் கையொழுத்திட்ட ஒன்றித்த உடன்படிக்கையின் பிரகாரம் பொலிப்டோ இலங்கை தனியார் கம்பனி தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் பெற்றொலிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் உள்ளடக்கப்பட்டது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டமாக ஆரம்பத்தில் நிதியினை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தும் திறைசேரியிடமிருந்து இச்செயற்திட்டதிற்காக அதிக | பொலிப்டோ இலங்கை கம்பனியை செயற்பாடுள்ளதாக அமுல்ப்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தினை தயாரித்து அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ரூபா 80 மில்லியனுக்கு அதிகமான சொத்துக்களும் ஏனைய வசதிகளும் ஏனைய முதலீட்டாளர்களின் முதலீடும் முறையான பெறுபேறுகள் இல்லாது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறு இக்கம்பனியை செயற்படுத்தி வனைத்திறனாக அமுல்ப்படுத்துவதற்காக அமைச்சிடம் எதுவித முறைப்படியான வேலைத் திட்டம் காணப்படுகின்றது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

நிதியினை ஈடுபடுத்துதல் சிக்கலானதால் கம்பனியை பேணுவதற்கு முடியாத நிலைக்கு மாறியுள்ளதனால் 2018-08-21 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 -09-26 ஆந் திகதி நிறுவனம் மீளமைப்புச் செய்யப்பட்டது. அதற்கிணங்க நிகழ்காலத்தில் அந்த நிறுவனத்தின் உரிமையில் 60% உரிமையானது இந்த அமைச்சிற்கு இல்லாததுடன் அந்த நிறுவனத்திடம் காணப்பட்ட ரூபா 80 மில்லியன் அளவிலான சொத்துக்களும் அந்த நிறுவனத்தை செயற்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட மூதலீட்டாளருக்கு 2018-09-26 ஆந் திகதி உடன்படிக்கையின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதியை மீண்டும் அரசாங்கத்தினால் அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையன் பிரகாரம் பொலிற்றோ இலங்கை தனியார் கம்பனியை செயற்படுத்தி பேணுகின்ற நேரடிப் பொறுப்பு இந்த அமைச்சிற்கு இல்லாததுடன் அந்த நிறுவனத்தை செயற்படுத்துவதற்காக தேவையான வசதிகளை வழங்குதல் மாத்திரம் செய்யப்படுதல் வேண்டும். தற்பொழுது சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய பட்டியல்ப்படுத்தப்பட்ட கழிவுப்பொருள் முகாமைத்துவ அனுமதிமதிப் பத்திரத்தினை வழங்குதல் தாமதமடைந்ததன் காரணமாக தற்பொழுது

| | | |
|---|---|---|
| | செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. அந்த அனுமதிப்பத்திரம் பொலிப்டோ இலங்கை தனியார் கம்பனியினால் பெற்றுக்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சு மற்றும் சுற்றாடல் அதிகார சபைக்கு தேவையான சிபாரிசுகளை இந்த அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. | |

**3.2 ஒழுங்குபடுத்துதல் கடமைகள் முறைப்படியாக நிறைவேற்றப்படாமை**

**.......................................................................................................**

**3.2.1 கப்பல் எண்ணை மற்றும் செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் வழங்குதல்**

**.......................................................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **.................................................** | **................................** | **.............................** |
| வலு சக்தி அமைச்சின் மேலதிக செயலாளரின் **DEVF/6/1/23(II)** ஆம் இலக்க 2022 பெப்ரவரி 15 ஆந் திகதிய கடிதம் மற்றும் பட்டோலை இலக்கம் 1 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கப்பல் எண்ணை வியாபாரத்திற்காக எழுத்திலான அதிகாரத்தை பெற்றுக்கொண்ட நபரினால் தமது மாதாந்த கப்பல் எண்ணை நடவடிக்கை தொடர்பான ஒரு கூற்றினை அடுத்துவரும் மாதத்தின் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அமைச்சிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டின் போது எழுத்து மூலம் அதிகாரம் பெற்ற 13 கம்பனிகளால் முறைப்படியாக மாதாந்த கப்பல் எண்ணை நடவடிக்கை தொடர்பான அறிக்கைகள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அதற்கு மத்தியில் 05 கம்பனிகள் எந்த அறிக்கையையும் சமர்ப்பித்திருக்கவில்லை. அவ்வாறே நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அறிக்கைகளை சமர்ப்பிக்காத 08 | கப்பல் எண்ணை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினால் கடந்த காலத்தில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 நிலைமையின் காரணமாக நிர்ணயிக்கப்பட்டவாறு அறிக்கைகளை சமரப்பிக்குமாறு அந்த நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | மாதாந்த கப்பல் எண்ணை நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை தாமதமின்றி வழங்குவதற்கும் அவற்றினை முறைப்படியாக மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய துடன் தாமத கட்டணங்களை அறவீடு செய்தலினை தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்டவாறு அறிக்கைகளை சமர்ப்பிக்காத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்’டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்கள் தொடர்பாக அறிவிடப்பட வேண்டிய ரூபா 180,000 இற்கு தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நிர்ணயிக்கப்பட்டவாறு அறிக்கைகளை சமர்ப்பிக்காத நிறுவனங்களுக்கு எதிராக அமைச்சினால் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3.3 தார் இறக்குமதியை ஒழுங்குபடுத்துதல்**

**..................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **.....................................................** | **..................................** | **..............................** |
| பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் 2018 பெப்ரவரி 07 ஆந் திகதிய 2018/01 ஆம் இலக்க சுற்றிக்கையின் பிரகாரம் தார் இறக்குமதியாளர்களால் தார் இறக்குமதி தொடர்பான காலாண்டு ரீதியான அறிக்கைகளை அமைச்சிற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் தொடர்பாக இறக்குமதியாடர்களிடமிருந்து காலாண்டு ரீதியான அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே அறிக்கைகளை சமர்ப்பிக்காத நிறுவனங்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தார் இறக்குமதியாளர்களிடமிருந்து தார் இறக்குமதி தொடர்பான காலாண்டு ரீதியான அறிக்கைகளை அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்படாததுடன் அத்தகவல்கள் தேவையான சந்தர்ப்பங்களின் போது இலங்கை சுங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் அத்தகவல்களை தார் இறக்குமதியாளர்களிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தார் இறக்குமதியாளர்களிடமிருந்து காலாண்டு ரீதியான அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவற்றினை முறைப்படியாக மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 பெற்றோலியம் சார்ந்த உற்பத்திப் பொருட்களின் நியம தரங்களும் ஒழுங்குபடுத்துதல்களும்**

**..............................................................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **.................................................** | **................................** | **.............................** |
| (அ) பெற்றோலியம் சார்ந்த பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணைக்கான நியம தரங்கள் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்டிருந்தும் இலங்கையில் அந்த நியமத்தை பின்பற்றுதலினை கட்டாயப்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டத்தினை தயாரிப்பதற்கு அமைச்சு இன்றுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இலங்கையில் இன்றுவரை அந்த எரிபொருட்களின் நியம தரங்களை பரீட்சிக்கும் அதிகாரம் பெற்ற ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுட ன் அதற்காக முறையான வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு அமைச்சிற்கு இன்றுவரை முடியாதிருந்தது. | ெற்றோலியம் சார்ந்த பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணைக்கான நியம தரங்கள் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்டிருந்தும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை சுத்திகரித்தல், களஞ்சியப்படுத்துதல், பகிர்ந்தளித்தல் என்பவற்றிற்காக நாட்டில் காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் நிலைமை மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை பயன்படுத்துகின்ற உபகரணங்களின் நிலைமையை கருத்தில கொண்டு அந்த அனைத்து நியமங்களையும் இலங்கையில் பின்பற்றுதலினை கட்டாயப்படுத்தும் இயலுமை இந்த அமைச்சிடம் இல்லை. காலத்திற்கு பொருத்தமான தேவைப்பாடு மற்றும் இயலுமையை கருத்தில் கொண்டு கடந்த பல ஆண்டுகளில் இந்த அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் நியம தரம் நாளதுவரையாக்கப்பட்டது. மேலும் பெற்றோலிய உற்பத்திக்கான புதிய நியமங்களை நாளதுவரையாக்குவது சம்பந்தமாக இலங்கை நியமங்கள் நிறுவனம் இந்த அமைச்சினதும் ஏனைய | பெற்றோலியம் சார்ந்த உற்பத்திப் பொருட்களின் நியமங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களுக் காக முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தரப்பினர்களதும் பங்குபற்றுதலுடன் நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் மூலம் ஆய்வு செய்து வருவதுடன் அதற்காக நியமங்களை அறிமுகப்படுத்துதல் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய மற்றும் அமைப/16/1576/19/06 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பெற்றோலிய அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் ஒருங்கிணைந்த பிரேரணையின் பிரகாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மூன்றாம் தரப்பினரின் மூலம் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் தொடர்பான ஆய்வுகூட பரிசோதனையை மேற்கொள்ளக்கூடிய நவீனமயமான மற்றும் சகல அம்சங்களும் பூரணப்படுத்தப்பட்ட பெற்றோலிய ஆய்வு கூட கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இன்று வரை அதன் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அந்த நிறுவனத்துடனான இணக்கப்படாட்டிற்கு அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதற்கான சாட்சிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கிணங்க சுயாதீனமான ஒரு முன்றாந் தரப்பினரின் | இலறங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாட்டிற்கு இறக்குமதி செய்கின்ற பெற்றோலிய உற்பத்தி பொருட்களின் ஆய்வுகூட பரீட்சிப்பு ISO 17025 (உயர்தர மற்றும் பரீட்சிப்பு பெறுபேறுகளுக்காக தொழில்நுட்ப ரீதியான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணத்துவ தரச்சான்றிதழ்) ஒப்புதலுக்கு தகைமையுள்ள இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. எரிபொருள் கப்பல் இருப்புக்களின் ஆய்வுகூட பரீட்சிப்பானது நிபுணத்துவ பதவியினரின் தற்போதைய ஒரு செயற்பாடாக இருந்ததனால் கப்பல் இருப்பு வருகை தந்ததன் பின்னர் பரீட்சிப்பிற்காக பங்குபற்றக்கூடிய அர்ப்பணிப்புள்ள ஆய்வுகூட ஊழியர்கள் இருத்தல் வேண்டும். கப்பலில் ஏற்றுதல் தொடர்பான விபரம் CPSTL மற்றும் CPC நிறுவனங்களிடம் உள்ளது என்பதனாலும் ISO 17025 ஒப்புதலினைக் கொண்டுள்ள CPSTL ஆய்வுகூடங்களில் இறக்குமதிகளை ஆய்வுகூட தெரிவுப் பரீட்சிப்பிற்கு உட்படுத்துதல் மிகவும் பொருத்தமானதாகும். முதலாவது சந்தர்ப்பத்தின் | மூன்றாந் தரப்பினரின் மூலம் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக போதியளவு கவனம் செலுத்த வேண்டியதுடன் ஒரு அரசாங்க நிறுவனத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற முதலீட்டினை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் தொடர்பான ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்ளும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தப்படாமையால் பெற்றோலிய ஆய்வுகூடம் நீண்டகாலம் விளைவற்றுக் காணப்பட்டது. | போது நிராகரிக்கப்படுகையில் அல்லது கப்பலில் ஏற்றுவதற்காக இரண்டாவது மாதிரியை மீண்டும் பரீட்சிக்கும் போது நாட்டிற்குள் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்காக முழுமையாக சுயாதீனமாக ISO 17025 ஒப்புதலைக் கொண்ட ஆய்வுகூடம் இருத்தல் முக்கியத்துவமானதும் சாதகமானதாகவும் உள்ளதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது இந்த ஆய்வு கூடத்தின் சேவையை பெற்றுக்கொள்ளலாம். ஆய்வுகூடத்தின் வசதிகள் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்பவர்களால் அவர்களின் ஆய்வுகூட பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்காக பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. | |
| (இ) | ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்குமாக நாட்டில் காணப்படுகின்ற வேண்டுதல் நிலைமை, வெளிநாட்டு நாணய தேவைப்பாடுகள், நாட்டின் ஏனைய இறக்குமதிகளின் மற்றும் உற்பத்திகளின் முக்கியத்துவம் முதலியவை தொடர்பாக முறைப்படியாகவும் ஏனைய நிறுவனங்களுடனான உள்ளக தொடர்புகளுடனும் காலத்திற்குப் பொருத்தமான தகவல்கள் உள்வருதல் மற்றும் அதன் அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு முடியுமான தகவல் முறைமை அமைச்சிற்குள் உள்ளன என்பது உறுதிப்படுத்தப்படவில்லை ல. அதற்கிணங்க நாட்டின் | ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திப் பொருளுக்காக நாட்டில் காணப்படுகின்ற வேண்டுதல் நிலைமை, வெளிநாட்டு நாணய தேவைப்பாடுகள், உற்பத்திப் பொருட்களின் முக்கியத்துவம் முதலியவை தொடர்பாக காலத்திற்குப் பொருத்தமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பெற்றோலிய தேவைப்பாடு வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அத்தகவல்கள் இலங்கை பெற்றோலிய கூட்டத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள், இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தர்கள் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனியின் உத்தியோகத்தர்கள் மற்றும் இந்த அமைச்சின் உத்தியோகத்தர்களை | ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திப் பொருளுக்குமாக அனைத்து துறைகளிலும் காணப்படுகின்ற எரிபொருள் வேண்டுதலினை தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதுவும் அதற்காக அரசாங்க நிறுவனங்களுடன் உள்ளக தொடர்புகளை பேணி காலத்திற்குப் பொருத்தமான தகவல்களை பரிமாற்றம் செய்யக்கூடிய தகவல் முறைமையை |

| | | | |
|---|---|---|---|
| | தேவைப்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் முன்னுரிமையினை இனங்கண்டு ஒவ்வொரு துறைக்காக அங்கீகாரத்தினை வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதாள ன்பதும் சிக்கலுடையதாகும். | உள்ளடக்கிய இருப்புக் குழுவின் மூலம் நாளதுவரையாக்கப்படும். மேலும் 2021 ஆம் ஆண்டின் இறுதிவரை அனைத்து துறைகளின் எரிபொருள் வேண்டுதலினை தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்பொழுது காணப்படுகின்ற வெளிநாட்டு நாணய சிக்கலின் காரணமாக முன்னுரிமையின் பிரகாரம் எரிபொருளை வழங்குவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஸ்தாபிப்துவும் அத்தியவசியமானதா கும். |

**3.5 விசேட செயற்திட்ட முகாமைத்துவம்**

**...........................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ................................................. | | ................................ | ............................. |
| (அ) | 2007 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற சர்வதேச கேள்வி மனுக்கோரலின் பிரகாரம் மன்னார் வளைகுடாவில் M2 ஆய்வு செய்யும் நிலப்பகுதியில் பெற்றோலிய ஆய்வு நடவடிக்கைகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட கெயான் இலங்கை தனியார் கம்பனி 2011 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட அகழ்வுகளின் பிரகாரம் இரண்டு இயற்கை வாயுக் குதங்கள் உள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இக்கம்பனி மன்னார் வளைகுடாவில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை இடை நடுவில் கைவிட்டு 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதித | ஐ எச் எஸ் குளோபல் கம்பனியின் (IHS GLOBAL) உதவி மற்றும் வழிகாட்டலின் கீழ் 2017 ஆம் ஆண்டில் எம்2 (M2) ஆய்வு நிலப்பகுதியில் அமைந்துள்ள இயற்கை வாயு குதங்களை அபிவிருத்தி செய்வதற்கான விருப்பத்தை தெரிவிக்கும் கூற்று (Expression of Interest) கோரப்பட்டது. அமெரிக்க ஐக்கிய குடியரசின் ஹுஸ்டன் (Houston) நகரத்தில் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் இலண்டன் நகரத்தில் இதற்காக சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கலந்துரையாடலானது முதலீட்டாளர்களுடன் நடாத்தப்பட்டது. அதன் போது இந்த இயற்கை வாயு | மன்னார் வளைகுடாவின் M2 ஆய்வு நிலப்பகுதியில் பெற்றோலிய ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அல்லது இனங்காணப்பட்ட இரண்டு குதங்களின் இயற்கை வாயுவினை வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்காக முறையான வேலைத்திட்டத்தினை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையினை முடிவுறுத்தியிருந்தது. மேலும் இதன் ஆய்வு நடவடிக்கைகளுக்காகவும் இயற்கை வாயுவினை வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்குமான சந்தைப்’படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டின் போது சர்வதேச போட்டி கேள்வி மனுக்கோரலின் மூலம் IHG GLOBAL கம்பனியை தெரிவு செய்த 2016 திசெம்பர் மாதத்திலிருந்து 2018 ஆகஸ்ட் மாதம் வரை சந்தைப்படுத்தல் செயற்திட்டத்தினை தொடங்குவதற்காக அமெரிக்க டொலர் 300,000 அதாவது அப்போது காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் ரூபா 46,610,853 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக்காணி பகுதியில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அல்லது இனங்காணப்பட்ட இரண்டு குதங்களின் இயற்கை வாயுவினை வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்கு முறைப்படியான வேலைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு அமைச்சிற்கு இன்றுவரை முடியாதிருந்தது. | குதங்களை அபிவிருத்தி செய்வதற்கு விருப்பத்தினை தெரிவித்த ஒவ்வொரு முதலீட்டாளரும் உற்பத்தி செய்த இயற்கை வாயு நானாவித துறைசார்ந்த பயன்பாட்டிற்காக (Sectoral Consumption) அரசாங்க அர்ப்பணிப்பு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அப்போது இலங்கையில் அவ்வாறான இயற்கை வாயு கொள்கை அமுல்ப்படுத்தப்படவில்லை. எனவே பெற்றோலிய வளங்கள் செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் 2017 ஆம் ஆண்டிலிருந்து இயற்கை வாயுக்காக தேசிய கொள்கையினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த தேசிய இயற்கை வாயு கொள்கை 2020 ஒக்தோபர் மாதத்தின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும் 2019 ஆம் ஆண்டில் இந்த வாயுவினை அபிவிருத்தி செய்வதற்காக சிறிய கேள்வி சுற்றுவட்டம் கோரப்பட்டது. எனவே இதற்காக பொருத்தமான ஒரு செயற்பாட்டாளரினை தெரிவுசெய்வதற்கு முடியாதிருந்ததுடன் புதிய பெற்றோலிய வளங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் மீண்டும் பொருத்தமான ஒரு முதலீட்டாளரினை தெரிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மன்னார் வளைகுடாவிற்கு அருகாமையில் விமானத்தினால் மேற்கொள்ளப்பட்ட புவியீர்ப்பு விசை மற்றும் காந்தத்தினை ஆய்வு செய்வதன் மூலம் தரவுகளை ஆரம்பிக்கும் செயற்திட்டத்தினை துரிதமாகப் பூர்த்தி | 2019 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட இந்த உடன்படிக்கையின் பிரகாரம் முன்னைய அர்ப்பணிப்புக்களை (Pre-Commitment) உறுதிப்படுதத்தி தரவுகளைச் சேகரிப்பதற்கு பெல் ஜியோஸ்பேஸ் (Bell Geospace) கம்பனிக்கு | மன்னார் வளைகுடாவிற்கு அருகாமையில் ஆகாயமார்க்கமாக மேற்கொண்ட புவியீர்ப்பு விசை மற்றும் காந்த ஆய்வின் மூலம் தரவுகளை சேகரிக்கும் செயற்திட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சு தவறியிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி Bell Geospace கம்பனியுடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் நடவடிக்கைகள் 2020 ஆம் அண்டில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் தற்பொழுது அந்த நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனினும் கொரோனா (Covid) தொற்று நோயின் தாக்கத்தினால் இக்கம்பனிக்கு முன்னைய அர்ப்பணிப்புடன் இத்தரவுகளை சேகரிக்கும் ஆய்வு நடவடிக்கையினை 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள முடியாதிருந்தது. பின்னர் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 2021 ஆம் ஆண்டு வரை இத்தரவுகளைச் சேகரித்தலினை நீடிப்பதற்குரிய அமைச்ரவை அங்கீகாரம் Bell Geospace கம்பனிக்கு வழங்கப்பட்டது. அதன் பெறுபேறாக இக்கம்பனி 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து திசெம்பர் வரையான காலத்தில் இரண்டு கட்டங்களின் கீழ் இலங்கையின் ஆகாய எல்லைக்குள் M1, M2. C1 மற்றும் C2 ஆய்வு நிலப் பகுதியை உள்ளடக்கி ஆகாய மார்க்கமாக புவியூர்ப்பு விசை/காந்த தரவுகள் 17,000 Line Km அளவலில் சேகரிக்கப்பட்டது. இத்தரவுகள் தற்பொழுது பகுப்பாய்வுச் செயன்முறைக்கு (Data Processing) உட்படுத்தப்பட்டுள்ளதுடன் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றது. | துரிதமாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை அமைச்சு எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை கடல் பிரதேசத்தினை இலக்காகக் கொண்டு நாடளாவிய சமுத்திர சுற்றாடல் தரவுகளை சேகரிக்கும் ஆராய்ச்சி செயற்திட்டத்தினை ஆரம்பித்துவைப்பதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்கும் நாரா நிறுவனத்திற்குமிடையே 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி உடன்படிக்கை செய்து | இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் தகவல் தொழில்நுட்ப முறைமையினை அமுல்ப்படுத்துவதற்கு தகைமையுள்ள உத்தியோகத்தர்கள் இல்லாமையின் காரணமாக இத்தரவுகளை உள்ளடக்கிய வெப் சேர்வர் (Web Server) இயந்திரம் தேசிய நீர் வளங்கள் முகவராண்மை | நாடளாவிய சமுத்திர சுற்றாடல் தரவுகளை சேகரிக்கும் ஆராய்ச்சி செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக தரவுகள் தொடர்பான முறையான தகவல் முறைமையினை செயற்படுத்தக்கூடிய பயிற்சி உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளல் |

| | | |
|---|---|---|
| 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரை செயற்திட்டத்தின் மொத்த ஒப்பந்த விலையாகிய ரூபா 37,165,283 நாரா நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தரவுகள் தொடர்பான முறையான புரிந்துணர்வோடு தரவுகனள் முறைமையை செயற்படுத்தக்கூடிய பயற்சி உத்தியோகத்தர்கள் இல்லாமை மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமையின் காரணமாக இத்தரவுகளை உள்ளடக்கிய வெப் சேர்வர் இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டு முறையாக பயன்படுத்திக் கொள்வதற்கு இன்றுவரை முடியாதிருந்தது. | (NARA) நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் NARA நிறுவனம் இந்த இணையதள தரவுக் களஞ்சியத்தினை நாளதுவரையாக்கியதுடன் எந்த ஒரு முதலீட்டாளருக்கும் இத்தரவினை இணைய தளத்தினூடாக பயன்படுத்துவதற்கான இயலுமை உள்ளது. | மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் மற்றும் செய்ற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வலுசக்தி அமைச்சின் 2021 ஆம் ஆண்டு தொடர்பாக 52 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பலாலி விமான நிலையத்தில் வலய ரீதியான விமானப் பயணங்களை அமுல்ப்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக ரூபா 575 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2019 யூன் 06 ஆந் திகதிய 18/1229 ஆம் இலக்க | பலாலி விமான நிலையத்தில் விமானங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் தாக்க மேற்படுத்திய விடயங்களின் காரணமாக இலங்கை | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் சாத்திய வளத்தினை ஆய்வு செய்து துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு இறுதியில் முனையத்தினை நிர்மாணிப்பதனை பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டின் போது ICB நடைமுறைக்கு இணங்க கேள்வி கோருதல் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குதல், பிரதான உபகரணங்களை (களஞ்சிய தாங்கி, பகிர்ந்தளிக்கும் மொடியூல், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் என்பன) இறக்குமதி செய்து ஸ்தாபித்தலினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டில் இச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காதது டன் ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 3 சதவீதமான அளவில் காணப்பட்டது. | பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் இச்செயற்திட்டத்தினை தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) | கொழும்பு துறைமுகத்தில் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 75 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 39 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நடைமுறை ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகளில் 40% இனை பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் செய்றதிட்டம் இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை. | கொழும்பு துறைமுக அதிகாரசபை காணியில் நிர்மாணிக்கப்படுவதனால் அதற்காக துறைமுக அதிகார சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அந்த அனுமதியை வழங்குவதிலுள்ள தாமதத்தின் காரணமாக இச்செயற்திட்டத்தினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்னுகுள் ஆரம்பிப்பதற்கு முடியாதுள்ளது. | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் சாத்திய வளத்தினை ஆய்வு செய்து துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கெரவலபிடிய கரையோரத்திலிருந்து கெரவலபிடிய மற்றும் களணிதிஸ்ஸ மின்நிலையம் வரை 5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மிதக்கும் களஞ்சிய மீள் உருவாக்கல் பிரிவிலிருந்து (FSRU) மீள் உருவாாக்கல் இயற்கை வாயு (R-LNG) குழாய் வழியினை நிர்மாணிப்பதற்காக டொலர் நாற்பது மில்லியன் (40) மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது இதில் 5 சதவீதத்திற்கும் குறைந்த செயல்முன்னேற்றம் காணப்பட்டது என அறிக்கையிடப்பட்டிருந்தது. | கெரவலபிடிய கரையோரத்திலிருந்து கெரவலபிடிய மற்றும் களணிதிஸ்ஸ மின்நிலையம் வரை திரவமாக்கல் இயற்கை வழியினை நிர்மாணிப்பதற்காக பிரேரணையினை கோருதல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினை மதிப்பீடு செய்தல் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டது. ஆண்டு முழுவதும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காணப்பட்டிருந்தும் செயற்திட்டம் எதிர்பார்த்த செயல்முன்னேற்றத்தினை அடைந்திருந்தது. | செயற்திட்டத்தினை துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2035 - SOREM செயற்திட்டத்திற்காக மிகுதிக் காணியை சுவீகரிப்பதற்காக ரூபா 500 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் காணியை சுவீகரிப்பது தொடர்பாக உருவாகியிருந்த சட்டரீதியான சிக்கல் இன்றுவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்காத துடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. | SOREM செயற்திட்டத்திற்காக மிகுதிக் காணியை சுவீகரிப்பதற்காக ரூபா 500 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் இக்காணியை சுவீகரிப்பது சம்பந்தமாக காணப்பட்ட சட்டரீதியான சிக்கலை தீர்த்துவைத்ததன் பின்னர் பியகம பிரதேச செயலகத்தினால் இதனை சுவீகரிக்கும் நடவடிக்கையை முடிவுறுத்தல் வேண்டும். அச்சிக்கலினைத் தீர்த்து வைத்ததன் பின்னர் இப்பணத்தை உரிய தரப்பினர்களுக்கு செலுத்துவதற்கு முடியுமாக உள்ளதுடன் இச்சுவீகரிப்பினை துரிதப்படுத்துவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நவடிக்கை எடுத்து வருகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | செயற்திட்ட இலக்கம் 2036 - மாபிம வீதியினை மீளத்தயார்படுத்துவதற்காக ரூபா 250 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை தாமதித்தமையின் காரணமாக செயற்திட்டம் இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வீதியை மீளத்தயார்படுத்துவதற்குத் தேவையான காணியை சுவீகரிக்கும் நடைமுறை பியகம பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் காணியை சுவீகரித்ததன் பின்னர் செயற்திட்டத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் சாத்திய வளத்தினை ஆய்வு செய்து துரிதமாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கொலன்னாவை களஞ்சிய முனையத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 93,000 கன மீற்றர் கொள்ளளவுள்ள 9 எண்ணைத் தாங்கி செயற்திட்டத்தினை 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்திசெய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் இன்றுவரை அச்செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது எனவும் சில நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் அதற்கிணங்க எதிர்பார்த்த காலப்பகுதிக்குள் வேலையைப் பூர்த்தி செய்தல் சிக்கலானது எனவும் அவதானிக்கப்பட்டது. | கொலன்னாவை முனையத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற 93,000 கன மீற்றர் மொத்த கொள்ளளவுள்ள 9 தாங்கிகள் செயற்திட்டம் இரண்டு கட்டங்களைக் கொண்டுள்ளதுடன் 29,000 கன மீற்றர் கொள்ளளவினைக் கொண்ட தாங்கியினை 03 ஆம் கட்டத்தில் நிர்மாணித்து இறுதி மட்டத்தில் காணப்படுவதுடன் மிகுதி 06 தாங்கிகளையும் நிர்மாணிக்கும் நடவடிக்கையானது ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றலின் காரணமாக கைவிடப்பட்டுள்ளது. அதற்காக இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய கம்பனியால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 நட்டங்களும் சேதங்களும்**

**.........................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................................. | ................................ | .............................. |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆகக் குறைந்தது 04 ஆண்டுகள் காலத்தினை மிகைத்த பதிவழிக்கப்படாத முன்கொண்டு வரப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்களாக ரூபா 1,064,226 மொத்த தொகையான 17 வாகன விபத்துக்கள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை மீள அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021-12-31 ஆந் திகதி வரை பதிவழிக்கப்படாது முன்கொண்டுவரப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டு விடுதல்களின் மொத்தம் ரூபா 1,064,226 ஆக இருந்த போதிலும் இன்றுவரை 04 வாகன விபத்துக்களின் நட்டமாகிய ரூபா 103,635.77 பதிவழிக்கப்பட்டது. மேலும் 02 வாகன விபத்துக்கள் சம்பந்தமான நட்டமாகிய ரூபா 152,844.37 இனை பதிவழிப்பதற்காக உரிய அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. WPPE-9461 ஆம் இலக்க வாகனத்தின் விபத்திற்காக ரூபா 23,352.24 தொகையினை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அந்த நடவடிக்கையை தவிர்த்து மிகுதி மொத்த நட்டமாகிய ரூபா 784,393.62 இனை பதிவழிப்பது தொடர்பாக தற்பொழுது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதறங்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்**

**..................................................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................................. | ................................ | ............................. |
| அமைச்சிற்கு நேரடியாக தொடர்புபடுகின்ற நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களாக ''உபயோகிக்கக்கூடிய சுத்தமான வலுசக்தி'' இனங்காணப்பட்டிருந்தும் அந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் எந்த செயற்திட்டமும் திட்டமிடப்பட்டுள்ளது அல்லது அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அமைச்சினால் அதற்காக தேவையான நிதி ஏற்பாடு இனங்காணப்பட்டிருக்காததுடன் அமைச்சில் தற்பொழுது காணப்படுகின்ற பௌதீக வளங்களையும் பதவியியணியினர்களையும் அதற்காக ஈடுபடுத்திக்கொள்ளும் நடைமுறை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்குரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறை இனங்காணப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.ட | அமைச்சிற்கு நேரடியாக தொடர்புபடுகின்ற நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளாக ''உபயோகிக்கக்கூடிய சுத்தமான வலுசக்தி'' இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.<br><br>• இலங்கையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக திரவமாக்கிய இயற்கை வாயுவினை அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இணைந்து Floating Storage Regasification Unit, Mooring System, Pipeline ஆகிய அம்சங்களைக் கொண்ட ஒரு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்தின் கெரவலபிடிய மீளவாயுவாக்கல் பிரிவிலிருந்து களணிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையம் வரையான குழாய் வழி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளான ''உபயோகிக்க் கூடிய சுத்தமான வலு சக்தி'' இனை அறிமுகப்படுத்தி அக்குறிக்கோளினை நிறைவேற்று;ம் வகையில் ஒரு செயற்திட்டம் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். நிதி ஏற்பாட்டினை இனங்கண்டு அமைச்சில் தற்பொழுது காணப்படுகின்ற பௌதீக வளங்களையும் ஆளணியையும் அதற்காக ஈடுபடுத்தும் நடைமுறை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற் குரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்க ான நடைமுறையினை இனங்கண்டு அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

செயற்படுத்தப்பட்டுள்ள து. 2021 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஒரு முதலீட்டாளரினைத் தெரிவுசெய்வதற்கு செயற்திட்ட பிரேரணை கோருதல் இடம்பெற்றுள்ளதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளை மதிப்பீடு செய்தல் தற்பொழுது இடம் பெற்றுவருகின்றது.

- மத்திய மற்றும் கீழ் மட்ட இயற்கை வாயு சந்தைக்காக சட்டரீதியான ஒழுங்குபடுத்துதல் கட்டமைப்பினைத் தயாரிப்பதற்காக இயற்கை வாயு தொடர்பான தேசியக் கொளகையானது வரைபாக்கி 2020-10-17 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டதுடன் அதில் குறிப்பிடப்பட்ட வாயு பயன்பாட்டின் பிரதான திட்டம் (Gas Utilization Master Plan) தயாரிக்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்றுவருகின்றது.

- உராய்வு நீக்கி எண்ணைக்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆகக் குறைந்த நியம தரத்தினை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**5. மனித வளங்கள் முகாமைத்துவம்**

**...............................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ............................................... | ............................... | ............................ |
| (அ) | 2021 ஆண்டின் இறுதியில் அமைச்சின் அங்கீகரித்த பதவியணி 93 நபர்களை உள்ளடக்கியிருந்ததுடன் அத்திகதியல் உள்ளவாறான உள்ளபடியான பதவியிணர் 70 ஆகும். அதற்கிணங்க சிரேஷ்ட மட்டத்திலுள்ள 07 உத்தியோகத்தர்களை உள்ளடக்கி 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. | காணப்படுகின்ற சிரேஷ்ட தரத்திலான 04 வெற்றிடங்களில் பிரதான பொறியியலாளர் பதவி சட்ட உத்தியோகத்தர் பதவி, மற்றும் கணக்காளர் பதவிகளை நிரப்புவதற்கான தேவைப்பாடு தற்பொழுது தற்பொழுது உருவாகியிருக்காததனால் அந்த வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டள்ளது. தற்பொழுது வெற்றிடமாகக் காணப்படுகின்ற உதவி பணிப்பாளர் (பெறுகை) பதவியின் கடமை தற்காலிகமாக உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) இனால் மேற்கொள்ளப்படுகின்றது. | பதவியணி பற்றாக்குறையானது அமைச்சின் செயலாற்றலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமாகவிருந்தால் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறு இல்லையாயின் பதவியினர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உராய்வு நீக்கி எண்ணை, தார், கப்பல் எண்ணை வியாபாரம் முதலிய நடவடிக்கைகளை இலங்கையில் அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரத்தினை வழங்குதல், ஒவ்வொரு பிரிவினதும் நிதி ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறைகளை நிருவகிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் அந்த விடயம் தொடர்பான விசேட தொழில்நுட்ப | பெற்றோலியம் சார்ந்த கைத்தொழிலை ஒழுங்குபடுத்தும் தேவைபாட்டினை இனங்கண்டு அதற்கிணங்க ஒழுங்குபடுத்துதல் பிரிவினை ஸ்தாபிப்பதற்கும் அதன் கடமைகளுக்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பல அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இறுதியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை கவனத்திற்கு எடுத்து | உராய்வு நீக்கி எண்ணை, தார், கப்பல் எண்ணை வியாபாரம் முதலிய நடவடிக்கைகளை இலங்கையில் அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான அங்கீகாரத்தினை வழங்குதல், மற்றும் ஒவ்வொரு பிரிவின் தொடக்க ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகளுக்குரிய விசேட தொழில்நுட்ப அறிவுடனான தொழில்சார் |

அறிவுடன் கூடிய தொழில்சார் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பதவியணி அத்தியவசியமானதாக இருந்த போதிலும் அமைச்சினுள் அவ்வாறான தொழில்சார் உத்தியோகத்தர்கள் இல்லை என்பதுவும் அச்செயற்பாடுகளை முறைப்படியாக நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் தாபனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

21/1867/325/020-1 ஆம் இலக்க 2021-10-25 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் பெற்றோலியம் சார்ந்த கைத்தொழிலின் ஒழுங்குபடுத்தலினையும் உள்ளடக்கி 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலிய அதிகாரச் சட்டத்திற்கு மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்கள் தொடர்பாக திறைசேரி செயலாளருடன் கலந்துரையாடுவதற்கான தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2021-12-21 ஆந் திகதி இது தொடர்பாக திறைசேரி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டது. அதற்கிணங்க அமைச்சிற்கு நிரந்தர மேலதிக செலவுச் சுமையை மேற்கொண்டு விசேட தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் அறிவுள்ள உத்தியோகத்தர்களைச் சேர்த்து புதிய ஒழுங்குபடுத்தல் பிரிவினை தோற்றுவிப்பதனை விட தேவையான சந்தர்ப்பங்களில் உரிய துறையிலுள்ள விசேடத்துவ அறிவினைக் கொண்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்பினைப் பெற்று பல நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்த செயற்பாடாக இந்த ஒழுங்குபடுத்துதல் செயற்பாட்டினை நிறைவேற்றுதல் மிகவும் பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது.

உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பதவியணியினர் நிரப்புவதற்கு அல்லது பொருத்தமான தாபனக் கட்டமைப்பினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.